# <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>

## <u>O.S.No.208/2024</u>

| | |
|---|---|
| பிரதிவாதிகள் தரப்பு சாட்சி | **பி.சா. 1** |
| பெயர் | திரு. தினேஷ்குமார் |
| தந்தை / கணவரின் பெயர் | திரு. சண்முகம் |
| கிராமம் | புரிசை |
| வட்டம் | செய்யாறு |
| தொழில் | தனியார் |
| வயது | 29 |

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 26.11.2007 | வட்டாட்சியர் வழங்கிய வாரிசு சான்றிதழ் பி.சா.ஆ.1. |
| 2 | 12.10.2022 | சண்முகத்தின் இறப்பு சான்றிதழ் இணையவழி நகர் பி.சா.ஆ.2. |
| 3 | 20.03.2008 | கிரையப்பத்திரத்தின் இணையவழி நகல் பி.சா.ஆ.3 |
| 4 | – | பட்டாஎண் 574ற்கான கூட்டுப்பட்டா இணையவழி நகல் பி.சா.ஆ.4. |
| 5 | 16.03.2023 | சண்முகம் பெயரிலுள்ள வரி இரசீது பி.சா.ஆ.5. |
| 6 | – | சண்முகம் பெயரில் செலுத்திய மின் கட்டண இரசீது (எண்ணிக்கை–4) பி.சா.ஆ.6 |
| 7 | 22.04.2022 | வில்லங்கச்சான்றிதழ் இணையவழிநகல் பி.சா.ஆ.7. |
| 8 | 18.07.2022 | பதிலறிவிப்பு நகல் பி.சா.ஆ.8. |
| 9 | – | அறிவிப்பினை 2ம் வாதி வழக்கறிஞரிடம் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பி.சா.ஆ.9. |
| 10 | – | அறிவிப்பினை 2ம் வாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பி.சா.ஆ.10. |
| 11 | – | அறிவிப்பினை வட்டாட்சியர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பி.சா.ஆ.11. |
| 12 | – | அறிவிப்பினை கிராமநிர்வாக அலுவலர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பி.சா.ஆ.12. |
| 13 | 22.07.2024 | எங்கள் தந்தை இறந்த பிறகு எங்களுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு நகல் பி.சா.ஆ.13. |
| 14 | 25.07.2024 | பிரதிவாதிகள் கொடுத்த பதிலறிவிப்பு நகல் பி.சா.ஆ.14. |

| | | |
|---|---|---|
| 15. | – | மேற்படி அறிவிப்பினை 2ம் வாதி, அவரது வழக்கறிஞர், இந்தியா கிரிடிட் கம்பெனி லிமிடெட் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டைகள் பி.சா.ஆ.15 முதல் 17. |
| 16. | 22.10.2024 | வாதிகள் கொடுத்த அறிவிப்பின் நகல் பி.சா.ஆ.18. |
| 17. | 07.11.2024 | பிரதிவாதிகள் கொடுத்த பதிலறிவிப்பு அலுவலக நகல் பி.சா.ஆ.19. |
| 18 | – | அந்த அறிவிப்பினை வாதிகளின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக அட்டை பி.சா.ஆ.20. |

எனவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிராத்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை** :

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.10.31 19:21:30 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**